Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி


Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்



New College House (A Heritage Hotel)

2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
College House Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.



| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 62 | உள்ளூர் - 03.03.2026 | செவ்வாய் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 62 | வெளியூர் - 04.03.2026 | புதன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


**வீட்டில் தங்கம் குவிய! இந்த எளிய பரிகாரம்!!**

**உச்ச நீதிமன்றத்தில் 22 காலியிடங்கள்!**

**பி.எப். கணக்கு வைத்திருப்பவர்களுக்கு குட்நியூஸ்..!**

**முடிவுக்கு வருமா? முதல்வருடன் ப.சிதம்பரம்**

## ஈரான் ஏவுகணை தாக்குதல்: உயிர் தப்பிய பெஞ்சமின் நெதன்யாகு..!! இடிபாடுகளின் நடுவில் மோடிக்கு நன்றி!



புதுடெல்லி, மார்ச். 03–

மத்திய கிழக்கில் பதற்றம் உச்சம் தொட்டுள்ள நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை குறிவைத்து ஈரான் சரமாரியாக ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் பெஞ்சமின் நெதன்யாகு உயிர் தப்பியுள்ளார். அதைவிட முக்கியமாக, தாக்குதலுக்குப் பிறகு சேதமடைந்த பகுதியிலிருந்தே அவர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோது, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்தது சர்வதேச அரசியலில் புதிய கவனத்தை ஈர்த்துள்ளது.

**போர் சூழலில் பேட்டி:**

இஸ்ரேலின் பீட் ஷெமேஷ் (Beit Shemesh) பகுதியில் ஈரானிய ஏவுகணை தாக்குதலால் சேதமடைந்த யூத ஆலயத்தை நேரில் பார்வையிட்ட பெஞ்சமின் நெதன்யாகு, அங்கிருந்தே ஊடகங்களுக்கு பேட்டி அளித்தார். இடிபாடுகள் சூழ்ந்த சூழலில் அவர் கூறிய கருத்துகள் உலக அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. அந்த செய்தியாளரின் கேள்விக்கு பேட்டியில், "என் நெருங்கிய நண்பரான பிரதமர் நரேந்திர மோடியுடன் நீண்ட நேரம் பேசினேன். இஸ்ரேலுக்கு ஆதரவாகவும், உண்மைக்கு துணையாகவும் நின்றதற்காக அவருக்கு நன்றி தெரிவித்தேன். இந்திய மக்கள் இஸ்ரேலில் மதிக்கப்படுகிறார்கள்; இரு நாடுகளுக்கும் உள்ள நட்பு மிக வலிமையானது," என்று பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார். உரையாடலின் முழு விவரங்களை வெளியிடமாட்டேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஈரான் போர்: மத்திய கிழக்கு நாடுகளில் இருக்கும் அமெரிக்கர்களுக்கு டிரம்ப் அரசு முக்கிய உத்தரவு!!



புதுடெல்லி, மார்ச். 03–

மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதற்றம் உச்சத்தில் இருக்கிறது. ஈரான் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் தொடர்ந்து தாக்குதல்களை நடத்திய வண்ணம் இருக்கின்றன. அவர்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் சரமாரியாக ஏவுகணை வீசி வருகிறது. இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கில் உள்ள பல்வேறு நாடுகளின் மீதும் ஈரான் ஏவுகணை மழைகளை பொழிந்து வருகிறது.

இதனால் மத்திய கிழக்கில் வசிக்கும் மக்கள் கடும் அச்சத்தில் ஆழ்ந்துள்ளனர். இந்த போர் எப்போது தான் முடிவுக்கு வருமென எதிர்பார்க்கின்றனர். ஆனால் தற்போதைக்கு இந்த போர் தணிவதற்கான அறிகுறிகளே தென்படவில்லை. ஈரான் தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும் என கூறுகிறது, அமெரிக்காவும் இஸ்ரேலும் இதுவரை இல்லாத பெரும்படையையும் தாக்குதலையும் பார்ப்பீர்கள் என்று எச்சரிக்கிறது. போர் பதற்றம் அதிகரிக்கும் சூழலில் அமெரிக்க அரசாங்கம் மிக முக்கியமான ஒரு அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறது. அமெரிக்க வெளியுறவு துறை அமைச்சர் மார்க் ரூபியோ மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கர்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற வேண்டும் என உத்தரவு பிறப்பித்திருக்கிறார். ஈரான் ராணுவம் துபாய் மற்றும் பிற வளைகுடா நாடுகள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வரக் கூட கூடிய சூழலில் அவர் எக்ஸ் பக்கத்தில் வீடியோ வெளியிட்டுள்ளார்

## முதல்வருடன் ப.சிதம்பரம்! காங். நிர்வாகிகளுடன் அவசர ஆலோசனை!



சென்னை, மார்ச். 03–

திமுக – காங்கிரஸ் இடையே கூட்டணிப் பேச்சுவார்த்தை இழுபறியில் நீடித்து வரும் நிலையில் சென்னையில் ப. சிதம்பரம் வீட்டில் தமிழக காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் ஆலோசனை செய்தார்,

காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, கார்கே, ராகுல் காந்தி, வேணுகோபால் ஆகியோருடன் காணொலி வாயிலாக ப.சிதம்பரம் அவசர ஆலோசனை மேற்கொண்டு வந்தததாக தகவல்கள் தெரிவிக்கின்றனர் இதன் தொடர்ச்சியாக கார்கேவின் அறிவுறுத்தலின்படி ப. சிதம்பரம், முதல்வர் மு.க. ஸ்டாலினை. செய்தார், கனிமொழி எம்.பி உடன் இருந்தார். மாநிலங்களவைத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ளதால் அதற்கு முன்னதாக திமுக – காங்கிரஸ் தொகுதிப் பங்கீடு இறுதி செய்ய முயற்சி நடப்பதாகக் கூறப்படுகிறது.

## முதியோர், கைம்பெண்களுக்கு ஓய்வூதியத்தோடு கூடுதலாக ரூ.2000.. விளிம்பு நிலையில் இருப்போருக்கும் சிறப்பு நிதி ரூ.2000 வரவு! முதல்வர் மு.க.ஸ்டாலின் அதிரடி!

சென்னை, மார்ச். 03–

மார்ச் மாதம், முதியோர், கைம்பெண்களுக்கு ஓய்வூதியத்தோடு கூடுதலாக ரூ.2000 வரவு வைக்கப்பட்டு உள்ளதுடன், விளிம்பு நிலையில் இருப்போருக்கும் சிறப்பு நிதி ரூ.2000 வரவு வைக்கப்பட்டு உள்ளது. இது அவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஏற்கனவே கடந்த பிப்ரவரி மாத மகளிர் உரிமை தொகையுடன் மார்ச், ஏப்ரல் மாதத்திற்கான பணமும் சேர்த்து, அதனுடன் மேலும் ரூ.2000 விடுமுறை காண பணம் என கூறி மொத்தம் ரூ.5 ஆயிரம் ரூபாய் வரவை வைத்து, பரபரப்பை ஏற்படுத்திய முதல்வர் ஸ்டாலின், தற்போது ஓய்வூதியதாரர்கள், விளிம்பு நிலை மக்களுக்கும் கூடுதலாக ரூ.2000 வழங்கி உள்ளார். நம்பிக்கையுடன் வைத்த கோரிக்கையை இன்றுநிறைவேற்றியுள்ளோம்! தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விட மாட்டோம் என முதலமைச்சர் ஸ்டாலின் கூறி உள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், விளிம்புநிலையில் இருப்போர்க்கும் சிறப்பு நிதி! கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் பெண்களுக்குக் கோடைக்காலச் சிறப்புத் தொகுப்பாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கியது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, சமூகத்தின் விளிம்புநிலையில் வாழ்ந்து, அரசின் மாத ஓய்வூதியத் உதவித்தொகை பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள், வயது முதிர்ந்த திருநங்கையர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கும் இத்தகைய சிறப்பு நிதியை வழங்கிட வேண்டும் எனக் கோரிக்கைகள் வந்தன.




நம்பிக்கையுடன் அவர்கள் வைத்த கோரிக்கையை இன்றுநிறைவேற்றியுள்ளோம்!

நலிவு நிலை போக்கும் சிறப்பு நிதியாக 2000 ரூபாயை மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வங்கிக் கணக்கில் வரவு வைத்துள்ளோம்!

இதன்படி, பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பயன்பெற்று வரும் முதியோர், கைம்பெண்கள் என, மொத்தம் 29 இலட்சத்து 29 ஆயிரம் பயனாளிகளுக்கு தலா 3200 ரூபாயும், 5 இலட்சத்து 92 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளுக்கு தலா 3500 ரூபாயும், பராமரிப்பு உதவித்தொகை பெற்றுவரும் 2 இலட்சத்து 58 ஆயிரம் மாற்றுத் திறனாளிகளின் குடும்பங்களுக்கு, தலா 4000 ரூபாயும் இன்று காலை வழங்கியிருக்கிறோம். அதுமட்டுமின்றி, மீனவர் குடும்பங்களுக்கு ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலத்திற்கான மீன்பிடித் தடை கால உதவித்தொகையாக, குடும்பம் ஒன்றுக்கு ரூ.8000 வீதம் மொத்தம் 1,62,900 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல, நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 14,870 தேயிலை விவசாயிகள் பயன்பெறும் வகையில், 15 கூட்டுறவுத் தேயிலை தொழிற்சாலைகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்குக் கிலோ இரண்டு ரூபாய் ஆதார விலை என 8.53 கோடி ரூபாய் நிதி வழங்கப்படுகிறது.

இந்தத் தருணத்தில் மீண்டும் ஒருமுறை சூளுரைக்கிறேன் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விட மாட்டோம்!" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## அடுத்த பிரச்சனை..

# கத்தார் LNG உற்பத்தி முழுமையாக நிறுத்தம்..

## ஸ்தம்பிக்கப்போகும் உலக நாடுகள்..!!




கத்தார், மார்ச். 03–

எல்என்ஜி உற்பத்தியில் உலகின் முன்னணி நிறுவனமாக திகழும் கத்தார் எனர்ஜி, தனது எல்என்ஜி உற்பத்தியை முழுமையாக நிறுத்தியுள்ளது. ராஸ் லஃபான் தொழில்துறை நகரம் மற்றும் மெசைட் தொழில்துறை நகரத்தில் உள்ள தனது தொழிற்சாலைகள் மீது நடந்த ஈரான் தாக்குதல்களால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பை கத்தார் எனர்ஜி தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் கணக்கில் திங்கள்கிழமை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தின் அறிக்கையின்படி, "ராஸ் லஃபான் தொழில்துறை நகரம் மற்றும் மெசைட் தொழில்துறை நகரத்தில் இயங்கி வரும் எங்கள் தொழிற்சாலைகள் மீது நடந்த ராணுவ தாக்குதல்களால், எல்என்ஜி மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களின் உற்பத்தியை நிறுத்தியுள்ளோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கத்தார் எனர்ஜி தனது அனைத்து பங்குதாரர்களுடனும் தொடர்பில் இருப்பதாகவும், சமீபத்திய தகவல்களை தொடர்ந்து தெரிவிப்பதாகவும் கூறியுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதற்றம் தீவிரமடைந்துள்ள நிலையில் இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கத்தார் உலகின் மிகப்பெரிய எல்என்ஜி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடுகளில் ஒன்று. இந்த உற்பத்தி நிறுத்தம் உலக எல்என்ஜி சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் அபாயம் உள்ளது. இது இயற்கை எரிவாயு விலையை உயர்த்தலாம். இந்தியா போன்ற எல்என்ஜி இறக்குமதியை அதிகம் சார்ந்த நாடுகளுக்கு பெரும் சவாலாக மாறலாம். இந்த சம்பவம் உலக நாடுகளுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கத்தார் எனர்ஜி தனது வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதாக உறுதியளித்துள்ளது. உலக எரிசக்தி சந்தை இப்போது பெரும் ஏற்ற இறக்கத்தை சந்திக்கும் நிலையில் உள்ளது. முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்துறையினர் இந்த நிலைமையை கவனமுடன் அவதானித்து வருகின்றனர்.

ஒருப்பக்கம் கச்சா எண்ணெய் உற்பத்தியை OPEC கூட்டணி நாடுகள் அதிகரித்தாலும் ஹோர்மூஸ் நீர் வழிபாதையில் நடக்கும் ஈரான் தாக்குதல் சர்வதேச சந்தைக்கு வரும் கச்சா எண்ணெய் குறைந்துள்ளது. இதனால் கச்சா எண்ணெய், எரிவாயு என அனைத்தும் தற்போது பாதிக்கப்பட்டு உள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்னை, அசோக் நகரில் 7,874 சதுர அடி கட்டடப் பரப்பளவில் 12.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, பள்ளிக் கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பி. சந்தரமோகன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அரசு பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை தொடங்கியது!



சென்னை, மார்ச். 03–

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1–ந்தேதி மாணவர் சேர்க்கை தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

2026–27 ம் புதிய கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை நேற்று தொடங்கியது. சைதாப்பேட்டையில் உள்ள சி.எஸ்.ஐ. நடுநிலைப் பள்ளியில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

தமிழகத்தில் 35 ஆயிரம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பள்ளிகளில் 1–ம் வகுப்பு முதல் 8–ம் வகுப்பு வரை மாணவ–மாணவிகளை சேர்ப்பதற்கான பணிகள் தொடங்கியுள்ளன.

கடந்த ஆண்டு 4 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் புதிதாக சேர்க்கப்பட்டனர். இந்த ஆண்டு 5 லட்சம் மாணவர்களை சேர்ப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் தொடங்கியுள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கல்வி அதிகாரிகள் அரசு பள்ளிகளில் மாணவர்களை சேர்ப்பதற்கான நடவடிக்கையில் தீவிரம் காட்ட வேண்டும் என்று அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

சென்னையை பொருத்தவரையில் மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் 300–க்கும் மேற்பட்ட பள்ளிகள் உள்ளன. அரசு பள்ளிகள் மிகக் குறைந்த அளவிலே செயல்படுகிறது. மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி மாணவர் சேர்க்கையை தீவிரப்படுத்தி அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி உள்ளார்.

தலையங்கம் மதுரை மணி

செவ்வாய்க்கிழமை 03.03.2026

விசுவாவசு தமிழ் வருடம்

மாசி மாதம் 19-ம் தேதி

## பதறும் மத்திய கிழக்கு நாடுகள்.. எகிறும் தங்கம், வெள்ளி விலை! இனி என்னவாகும்?




உலகமே உற்று நோக்கும் மத்திய கிழக்கு பிராந்தியத்தில், இஸ்ரேல் – ஈரான் இடையிலான மோதல் உச்ச கட்டத்தை எட்டியுள்ளது. ஈரான் மீதான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் அதிரடி தாக்குதல்கள், உலகப் பொருளாதாரத்தையே உலுக்க தொடங்கியுள்ளன. இந்த போர் பதற்றத்தால் பங்குச்சந்தைகள் சரிவை சந்திக்க, முதலீட்டாளர்கள் அனைவரும் இப்போது பாதுகாப்பான புகலிடமான தங்கம் மற்றும் வெள்ளியை நோக்கி தஞ்சம் புகுந்துள்ளனர்.

கடந்த சில தினங்களில் மட்டும் சவரனுக்கு சுமார் 4,000 முதல் 5,000 ரூபாய் வரை அதிரடியாக உயர்ந்துள்ளது. இது வெறும் ஆரம்பம் தான், பதற்றம் நீடித்தால் தங்கம் விலை இன்னும் பல மடங்கு உயரும் என பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர். சாமானிய மக்கள் முதல் பெரும் முதலீட்டாளர்கள் வரை அனைவரையும் அதிர வைத்துள்ள இந்த விலை ஏற்றம், வரும் நாட்களில் எங்கே போய் நிற்கும்? பார்ப்போம்.

அணு ஆயுத ஒப்பந்தத்தில் கையெழுத்திட முரண்டு பிடித்து வரும் ஈரான் மீது, அமெரிக்காவும், இஸ்ரேலும் நேற்று முன் தினம் திடீரென தாக்குதல் நடத்தின. இதில் ஈரானின் உச்ச தலைவர் கமேனி உட்பட பலரும் கொல்லப்பட்டனர். பெண்கள், குழந்தைகள் என பலரும் கொல்லப்பட்டுள்ள நிலையில், அங்கு போர் பதற்றமானது உருவாகியுள்ளது. இஸ்ரேலின் தாக்குதலை தொடர்ந்து வளைகுடா பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய இலக்குகள் மீது ஈரான் பதில் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்த சூழலில் தங்கம் மற்றும் வெள்ளி விலையானது அதிகரித்துள்ளது. இது இன்னும் விலை ஏற்றம் காண வழிவகுக்கலாம் என்ற சூழல் காணப்படுகிறது. தொடர்ந்து இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்த போர் பதற்றமானது நீடிக்கும் என்பது தெரியவில்லை. ஆனால் இந்த பதற்றமானது எவ்வளவு காலம் வரையில் நீடிக்குமோ, அவ்வளவு காலம் வரையில் தங்கம் மற்றும் வெள்ளி விலையையும் பதற்றமாகவே வைத்திருக்கும். இப்பதற்றத்தின் மத்தியில் உலகளாவிய பங்குச் சந்தைகள் அழுத்தத்தில் உள்ளதால், பாதுகாப்பான முதலீடாக தங்கம் மற்றும் வெள்ளி விளங்குகிறது. இந்த போக்கு இன்னும் சிறிது காலத்திற்கு நீட்டிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்று காலை தொடக்கத்திலேயே தங்கம் மற்றும் வெள்ளி விலையானது சற்று கேப் அப் ஆக தொடங்கியதுடன், அதிக ஏற்ற இறக்கத்துடனும் காணப்படுகிறது. இந்த போக்கானது இனி வரும் நாட்களிலும் தொடரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச அளவில் ஏற்கனவே இருந்து வரும் பல்வேறு பதற்றங்கள் மத்தியில், மத்திய வங்கிகளின் தொடர் கொள்முதல் மற்றும் இடிஎஃப் (ETF) முதலீடுகள் காரணமாக, தங்கம் மற்றும் வெள்ளி விலைகள் ஏற்கனவே ஏறுமுகத்தில் உள்ளன. டொனால்ட் டிரம்ப்பின் வர்த்தக வரிகள் சட்ட விரோதமானது என அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இது உலகளாவிய நிச்சயமற்ற தன்மையை அதிகரித்துள்ளது. தற்போது இவற்றுடன் ஈரான் – இஸ்ரேல் பிரச்சனையும் சேர்ந்துள்ளது. குறிப்பாக கமேனி கொல்லப்பட்டதை அடுத்து சர்வதேச அளவில் பதற்றமானது அதிகரித்துள்ளது. கடந்த வாரத்தில் மட்டும் இந்திய பியூச்சர் சந்தையில் வெள்ளி விலை 22,054 ரூபாய் அல்லது 8.72% உயர்ந்தது. இதே கடந்த வாரம் தங்கம் விலை 5,228 ரூபாய் அல்லது 3.33% அளவுக்கு உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில் வெள்ளி விலை 12.55% ஏற்றம் கண்டும், தங்கம் 3.3% ஏற்றம் கண்டும் காணப்படுகிறது..

தற்போது ஈரானில் நிலவி வரும் பதற்றமான சூழல் மத்தியில். ஹார்முஸ் ஜலசந்தி வழியாக விநியோக தடை ஏற்படும் என்ற அச்சத்தால் கச்சா எண்ணெய் விலை உயர்வதும், தங்கம் விலைக்கு ஆதரவாக உள்ளது. அதோடு இந்த வாரம் வெளியாகவுள்ள அமெரிக்காவின் வேலைவாய்ப்பு குறித்த தரவுகள், சில்லறை விற்பனை மற்றும் ஐரோப்பிய மத்திய வங்கியின் (ECB) கூட்டம் போன்றவை சந்தையின் போக்கை மாற்றக்கூடும். வார இறுதியில் போர் பதற்றம் குறைந்து பேச்சு வார்த்தைகள் நடந்தால், இந்த விலை உயர்வுக்கு பிறகு லாப நோக்கம் கருதி விற்பனை நடக்கவும் வாய்ப்புள்ளது. ஆக சிறு முதலீட்டாளர்கள் கவனமுடன் செயல்படுவது அவசியம்.



திருப்பூர் மாவட்டம், அவிநாசி ஊராட்சி ஒன்றியம், கருவலூர் ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டார்கள்.

## துபாயில் மீண்டும் விமான சேவை.. இந்தியா வந்திறங்கிய பயணிகள்!

சென்னை, மார்ச். 03–

அணுசக்தி போட்டி காரணமாக ஈரான் மீது இஸ்ரேல் – அமெரிக்கா ஏவுகணைகள் மூலம் வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. தலைநகர் டெஹ்ரான் மற்றும் பிற பகுதிகளில் தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

தெஹ்ரானில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈரான் உச்ச தலைவர் அயத்துல்லா காமேனி கொல்லப்பட்டார். இதற்கு பதிலடியாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. மத்திய கிழக்கில் பல நாடு களின் வான்வழி மூடப்பட்டு விமான சேவை கள் முற்றிலும் முடங்கின.



இதனால் பலர் தாயகம் திரும்ப முடியாமல் தவித்து வருகின்றனர். இந்த சூழலில் நேற்று மாலை முதல் துபாய், ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் இருந்து குறைந்த எண்ணி க்கையிலான விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

துபாயின் அபுதாபியில் இருந்து ஒரு விமானம் நேற்று டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

அதேபோல மற்றொரு விமானம் அபுதாபியில் இருந்து மும்பையில் தரையிறங்கியது.

விமானத்தில் தாயகம் திரும்பிய இந்தியர்கள் கூறுகையில், "வானத்தில் ஏவுகணைகள் இடைமறித்து அழிக்கப்படுவதை எங்களால் பார்க்க முடிந்தது. வான்வெளி மிகவும் பரபரப்பாகவும் பதற்றமாகவும் இருந்தது" என்று தெரிவித்தனர்.

(மார்ச் 3) முதல் மஸ்கட் நகரிலிருந்து டெல்லி, கொச்சி, கோழிக்கோடு, மங்களூரு, மும்பை மற்றும் திருச்சி ஆகிய நகரங்களுக்கு மீண்டும் விமானங்களை இயக்கத் தொடங்குகிறது.

சவூதி அரேபியாவின் ஜெத்தாவில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க இன்று (மார்ச் 3) 10 சிறப்பு மீட்பு விமானங்கள் இயக்கப்பட உள்ளன. ஐக்கிய அரபு அமீர்காமத்திலும் நேற்று மாலை முதல் குறைந்த எண்ணிக்கையிலான விமானங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. ஏற்கனவே முன்பதிவு செய்த பயணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

## ஒரு சொட்டு எண்ணெய் வெளியேறாது.. ஹார்முஸ் ஜலசந்தி மூடல் - உலகத்துக்கே செக் வைத்த ஈரான்!

ஈரான், மார்ச். 03–

மத்திய கிழக்கில் போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், உலகின் மிக முக்கியமான கடல்வழிப் பாதையான ஹார்முஸ் ஜலசந்தியை மூடிவிடுவதாக ஈரான் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

ஈரானிய புரட்சிகர பாதுகாப்புப் படையின் மூத்த தளபதி பிரிகேடியர் ஜெனரல் இப்ராகிம் ஜப்பாரி இந்த அதிரடி அறிவிப்பை வெளியிட்டார். ஈரானிய ஊடகங்களில் பேசிய அவர், "ஹார்முஸ் ஜலசந்தி வழியாகச் செல்ல முயலும் எந்தவொரு கப்பலும் தீயிட்டு கொளுத்தப்படும்.




இங்கிருந்து ஒரு சொட்டு எண்ணெய் கூட வெளியேற அனுமதிக்க மாட்டோம். மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள எண்ணெய் குழாய்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவோம்.

கச்சா எண்ணெய் விலை வரும் நாட்களில் பேரலுக்கு 200 டாலர் வரை உயரும்" என்று பாக்கிறிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலகின் ஒட்டுமொத்த எண்ணெய் தேவையில் ஐந்தில் ஒரு பங்கு, அதாவது 20% இந்தப் பாதை வழியாகவே செல்கிறது.

தினமும் சுமார் 2 கோடி பேரல் கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருள் இதன் வழியாகக் கொண்டு செல்லப்படுகிறது.

சவுதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் தங்கள் ஏற்றுமதிக்கு இந்தப் பாதையையே நம்பியுள்ளன. கத்தார் தனது இயற்கை எரிவாயு ஏற்றுமதியை முழுமையாக இதன் வழியாகவே செய்கிறது. எனவே இவை அனைத்தும் கடுமையாக பாதிக்கப்படும். கச்சா எண்ணெய் தட்டுபாடால் இந்தியா உட்பட உலகம் முழுவதும் பெட்ரோல் டீசல் விலை விண்ணை முட்டும்.



பழனி அருகே கோரிக்கடவு ஊராட்சியில் 55 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட பணிகளுக்கு அமைச்சர் அர.சக்கரபாணி அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

## சற்றே குறைந்த தங்கம் விலை!

சென்னை, மார்ச். 03–

தங்கம் விலை இன்று சற்றே குறைந்துள்ளது. சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.80 குறைந்து ரூ.1,25,200–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ரூ.15,650–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.315–க்கும், பார் வெள்ளி 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## ஆண்டிபட்டி ஒன்றியத்தில் ரூ.50 லட்சத்தில் புதிய கட்டிடங்கள்!

ஆண்டிபட்டி, மார்ச். 03–

ஆண்டிபட்டி ஒன்றிய பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்ட ரூ.50 லட்சம் மதிப்பிலான புதிய பள்ளி வகுப்பறை மற்றும் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிட ங்களை சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். தேனி மாவட்டம், ஆண்டி பட்டி ஒன்றிய,சண்முகசு ந்தரபுரம் ஊராட்சியை சேர்ந்த முத்துசங்கிலிபட்டி கிராமத்தில், மாணவர்களின் கல்வி நலன் கருதி ரூ.18 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டது. இதனை ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். பின்னர் அவர் குத்துவிளக்கேற்றி வகுப்பறையை பார்வையிட்டார்.

அதேபோல், சண்முகசுந்தரபுரம் கிராமத்தில் நீண்ட நாட்களாக சிதிலமடைந்த நிலையில் இருந்த பழைய ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு மாற்றாக புதிய கட்டிடம் கட்ட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதையடுத்து, ரூ.31.40 லட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது. இந்தபுதிய அலுவலகத்தையும் எம்.எல்.ஏ மகாராஜன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.



இந்த விழாவில் திமுக பேரூர் செயலாளர் சரவணன், மாவட்ட துணை அமைப்பாளர் ராஜா, கிளைச் செயலாளர் அய்யப்பன், மாவட்ட வர்த்தக அணி அய்யணன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரத்தினம் மற்றும் சுப்புராஜ் கிராம பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ராஷ்மிகா மந்தனா & விஜய் தேவரகொண்டா 'மேட் ஃபார் ஈச் அதர்' விளம்பரத்தை கலாச்சார #Virosh நிகழ்வாக மாற்றினர்!

சென்னை , மார்ச் 03–


இந்தியாவின் பிரபல திருமண ஃபேஷன் பிராண்டான மான்யவர் மோஹே (Manyavar Mohey) தனது புதிய விளம்பரத் தொடர் 'மேட் ஃபார் ஈச் அதர்' (Made For Each Other)–க்காக ரஷ்மிகா மந்தனா மற்றும் விஜய் தேவர கொண்டா ஆகியோரையே பிராண்ட் அம்பாசிடர்களாக நியமித்துள்ளது. இந்த விளம்பரம் வெறும் விளம்பரம் அல்ல; இது காதல், கிண்டல் மற்றும் இசை கலந்த கதையை துல்லியமாகப் படம்பிடித்து, ஜோடியின் தனித்துவமான கெமி ஸ்டிரியும் இணைப்பையும் முன்னிலைப்படுத்துகிறது. ரஷ்மிகா–விஜய் ஜோடி ஸ்டைலான




"ட்வின்னிங்" உடைகளில் தொடங்கும் காட்சி, சிறு சண்டைகள் மற்றும் இசை கலந்த உரையாடலின் மூலம், காதல் மற்றும் வேறுபாடுகளின் அழகான ஒருங்கிணைப்பைக் காட்டுகிறது.

வேதாந்த் ஃபேஷன்ஸ் லிமிடெட் வருவாய் பிரிவு அதிகாரி வேதாந்த் மோடி கூறியதாவது, மான்யவர் மோஹே வெறும் ஆடைகள் வடிவமைப்பதல்ல, திருமண நினைவுகளை உருவாக்கும் ஒரு அனுபவமாக மாறுவதாகும். ஒவ்வொரு ஆடையும் இரண்டு தனித்துவமான ஆளுமைகள் ஒன்றாக இணைவதை கொண்டாடும் வகையில் வடிவமைக்கப்படுகிறது. ரஷ்மிகா மற்றும் விஜய் தங்கள் இயல்பான வசீகரம் மற்றும் அணுகக்கூடிய தன்மையால் கதையை உயிர்ப்பித்துள்ளனர்.

விளம்பரத்தில் விஜய் ஒரு மான்யவர் இண்டோ–வெஸ்டர்ன் உடையில், ரஷ்மிகா மோஹே லெஹங்காவில் ஜொலிக்கிறார். இருவரும் தங்களுக்குள் உள்ள வேறுபாடுகளையும், அதே வேறுபாடுகள் எப்படி அவர்களின் பிணைப்பை வலுப்படுத்துகின்றன என்பதையும் அழகாக வெளிப்படுத்துகின்றனர். இந்த புதிய தொலைக்காட்சி விளம்பரம் 360 டிகிரி பிரச்சாரமாக தொலைக்காட்சி, டிஜிட்டல், அச்சு ஊடகம், சினிமா மற்றும் சமூக ஊடகங்களில் விரிவாகக் காட்சிப்படுத்தப்படும்.



## வீட்டில் தங்கம் குவிய! இந்த எளிய பரிகாரம் 1 செய்தால் போதும்..! அடகுக்கு போன நகை கூட கைக்கு வரும்!!




தங்கத்தில் முதலீடு செய்தால் அவசரத்திற்கு உதவும் என்பார்கள். தங்கத்தை அணியவும், வாங்கவும் விரும்பாதவர்கள் ரொம்ப குறைவு. சிலரிடம் தங்கம் சேர்ந்து கொண்டே இருக்கும். சிலருக்கோ எவ்வளவு முயன்று குண்டுமணி தங்கம் கூட வாங்க யோகம் இருக்காது. அடகு வைத்த நகையை மீட்க முடியாமல், மகளின் திருமணத்திற்கு நகை எடுக்க முடியாமல் சிரமப்படுபவர்கள் வீட்டில் இந்த எளிய பரிகாரம் செய்தால் வீட்டில் தங்கம் பெருகி கொண்டே இருக்கும்.

தங்கம் வாங்கவே முடியாத சூழல் இருப்பவர்களுக்கு சொர்ணதோஷம் இருக்க வாய்ப்புள்ளது. தங்கத்தை நகையாக செய்வதற்கு முன்பும், கடைகளில் விற்கும்போதும், அடகு வைத்தாலும் அதில் பலருடைய கைகள் தொட்டிருக்கும். அப்படி தொட்டவர்களுக்கு நல்ல எண்ணம், தீய எண்ணம் எது வேண்டுமானாலும் இருக்கலாம். இப்படி பலரின் கைகள் படுவதால் அதில் சொர்ணதோஷம் ஏற்படுகிறது. அந்த தங்கத்தை வாங்கி நம் வீட்டில் வைத்தால் தங்காது. இந்த தோஷம் விலக சில பரிகாரங்களை இங்கு காணலாம்.

ஒரு சுத்தமான கிண்ணத்தில் நகையை வைத்து அதில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றிக் கொள்ளுங்கள். அதனுள் ஒரு தாமரை மலரை வைத்து பன்னீர் பூ, ஆவாரம்பூ ஆகிய இரண்டையும் தண்ணீருக்குள் போட்டு கொள்ளுங்கள். உங்கள் கைகளை அந்த தண்ணீரில் நனைத்து சொர்ண தேவதையை மனதார வேண்டி பிரார்த்தனை செய்யுங்கள். இப்படி 5 நிமிடங்கள் கைகளை தண்ணீருக்குள் வைத்து "வீட்டில் இருக்கும் சொர்ணதோஷம் விலகி, தங்கம் சேர வேண்டும்" என பிரார்த்தனை செய்தால் வீட்டில் தங்கம் தங்கும். இந்த பரிகாரத்தை வெள்ளிக்கிழமை செய்தால் தான் பலன் கிடைக்கும்.

இந்த பரிகாரத்தை பொறுத்தவரை அந்த மூன்று மலர்களும் சொர்ணதோஷத்தை ஈர்த்து கொள்ளும். பிரார்த்தனை செய்த பிறகு அந்த 3 பூக்களை வாழை இலையில் வைத்து கொள்ளுங்கள். அதனுடன் தங்க நகைகளை வைத்து மஞ்சள் நூல் கொண்டு கட்டி பூஜை அறையில் சுவாமி திருவுருவ படம் முன்பாக வைத்துவிடுங்கள். திங்கள்கிழமை அன்று அந்த முடிச்சை அவிழ்த்து நகைகளை எடுக்கலாம். அந்த பூக்களை கால்படாத இடத்தில் போட வேண்டும்.

பரிகாரம் 2:

கண்ணாடி கிண்ணத்தில் கொஞ்சம் பச்சை கற்பூரம், 3 கிராம்புகள், 2 துளசி இலைகள் எடுத்து, அத்துடன் ஒரு பொட்டு தங்கம் அல்லது ஏதேனும் சிறிய தங்க நகையை வைத்து, பீரோவிற்குள் வைத்துவிடுங்கள். இந்த பொருள்கள் பெருமாள், மகாலட்சுமிக்கு இணக்கமான பொருட்கள் என்பதால் வீட்டில் உள்ள எதிர்மறை ஆற்றலை அழிக்கும். நேர்மறை ஆற்றலை அதிகமாக்கும். கொஞ்ச நாளில் வீட்டில் தங்கம் சேர தொடங்கும். அடகு வைத்த நகைகள் கூட வீட்டிற்கு வந்துவிடும். அதற்கு வழி பிறக்கும். இந்த பரிகாரம் வெள்ளிக்கிழமை தான் செய்ய வேண்டும்.

பரிகாரம் 3

புது தங்கம் வாங்கினால் அல்லது அடகு வைத்த நகையை மீட்டு வீட்டுக்கு கொண்டு வந்தால் உடனே சுத்தமான நீரில் கழுவி கொள்ள வேண்டும். அதை கொண்டு வந்ததும் பயன்படுத்தக் கூடாது. சுத்தமான நீரில் கழுவிய பிறகு கொஞ்சம் உப்பு, மஞ்சள் பொடி போட்டு அடுத்து அதை கழுவி கொள்ள வேண்டும். இந்த மாதிரி பரிகாரத்தை வெள்ளியன்று அல்லது பௌர்ணமி நாளில் செய்ய வேண்டும். இந்த நகைகளை கழுவிய பிறகு பூஜை அறையில் வைத்து கொள்ளுங்கள். குரு ஹோரை நேரத்தில் பூஜித்து, அந்த நகைகளை சுவாமி திருவுருவப் படத்திற்கு முன்பு வையுங்கள். கொஞ்ச நேரம் பிரார்த்தனை பண்ணிய பிறகு பயன்படுத்துங்கள். இப்படி செய்தால் அடமானத்தில் மீட்ட நகைகள் திரும்ப அடகுக்கு செல்லாமல் நம்மிடம் தங்கும்.

இந்த 3 பரிகாரங்களில் ஏதேனும் ஒன்றினை மனதார நம்பி, சுமார் 3 வாரங்கள் அல்லது 6 வாரங்கள் விடாமல் தொடர்ச்சியாக செய்தீர்கள் என்றால் உங்கள் வீட்டில் தங்கம் தங்கும். கையில் பணம் சேர்ந்து தங்கம் வாங்கும் யோகம் கிடைக்கும். வீட்டில் பணப்புழக்கமும் தங்கம் சேர இதை வெள்ளிக்கிழமை செய்து பாருங்கள்.

## தமிழ்நாட்டில் Vedantu JEE Main 2026 வெற்றி: 345 மாணவர்கள் 90%க்கு மேல் மதிப்பெண் சாதனை!




சென்னை , மார்ச். 01–

Vedantu மாணவர்கள் இந்த ஆண்டு தேர்வில் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளனர். மொத்தம் 345 மாணவர்கள் 90%க்கு மேல் மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளனர். மாநிலத்தின் தலைசிறந்த சாதனையாளர்களில் பரமேஷ்வர் M 99.92% பெற்று முன்னிலை வகித்தார்; அவரைத் தொடர்ந்து வருண் ஆதித்யா S 99.77% மற்றும் பூமிகா ஷர்மா 99.75% பெற்று அதிக மதிப்பெண் பட்டியலில் இடம்பிடித்தனர். மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 Vedantu மாணவர்கள் 99.5%க்கு மேல் மதிப்பெண் பெற்றுள்ளதுடன், 26 மாணவர்கள் 99%க்கு மேல் மதிப்பெண் பெற்று உயர்ந்த சாதனை புரிந்துள்ளனர். இவ்வாறு மாநிலம் முழுவதும் மாணவர்கள் தொடர்ந்து சிறந்த கல்வித் திறனை வெளிப்படுத்தி வருகின்றனர். தமிழ்நாடு முழுவதும் 20 Learning Centres–ஐ இயக்கும் Vedantu, தனது இரண்டாவது முழுமையான கல்வியாண்டில் முன்னேற்றப் பாதையில் உள்ளது. Ved AI எனும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான தனிப்பட்ட கற்றல் அமைப்பு, Smart Clickers மற்றும் 24×7 InstaSolve போன்ற வசதிகள் மூலம் மாணவர்களின் கற்றலை தனிப்பயனாக்கி, உடனடி மதிப்பீடு மற்றும் வழிகாட்டுதலை வழங்கி கல்வித் தரத்தை உயர்த்தி வருகிறது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### உடலை சுத்தம் செய்யும் ஒரு அற்புதமான பானம்.. தினமும் ஒரு கப் குடித்தால்?



தற்போதைய வாழ்க்கை முறை, மன அழுத்தம் மற்றும் சரியான உணவுப் பழக்கம் இல்லாததால், பலர் வாயு, அமிலத்தன்மை, மலச்சிக்கல் மற்றும் அஜீரணம் போன்ற செரிமானப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றனர். இந்த பிரச்சனைகளின் பொதுவான அறிகுறிகள் நெஞ்செரிச்சல், புளிப்பு ஏப்பம் மற்றும் தொண்டையில் அடைப்பு உணர்வு ஆகியவை அடங்கும். உணவு செரிமானப் பாதையில் நுழையும் போது உருவாகும் ஹைட்ரோகுளோரிக் அமிலத்தின் ரிஃப்ளக்ஸ் காரணமாக இந்த எரியும் மற்றும் அமிலத்தன்மை பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்த பிரச்சனைகளிலிருந்து நிவாரணம் பெற அடிக்கடி மருந்துகளைப் பயன்படுத்துவதை விட ஆயுர்வேத குறிப்புகளைப் பின்பற்றுவது நல்லது என்று ஆயுர்வேத நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நம் முன்னோர்கள் நம்பிய ஒரு பயனுள்ள ஆயுர்வேத குறிப்பு கொத்தமல்லி தேநீர். இது வாயு மற்றும் அமிலத்தன்மை போன்ற பிரச்சினைகளிலிருந்து உடனடி நிவாரணம் அளிக்கிறது, மேலும் பல ஆரோக்கிய நன்மைகளையும் கொண்டுள்ளது.

**கஷாயம் தயாரிக்கும் முறை:**

ஒரு கிளாஸ் அல்லது அரை லிட்டர் தண்ணீரை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு தேக்கரண்டி கொத்தமல்லி விதைகள், ஒரு தேக்கரண்டி சீரகம், மூன்று அல்லது நான்கு கருப்பு மிளகு, மூன்று அல்லது நான்கு கிராம்பு (கிராம்புகளின் நடுவில் உள்ள பூவை அகற்றவும்), மற்றும் ஒரு சிட்டிகை மஞ்சள் சேர்க்கவும். இந்த கலவையை அடுப்பில் வைத்து தண்ணீர் பாதியாக குறையும் வரை நன்கு கொதிக்க வைக்கவும். தண்ணீர் பாதியாக குறையும் வரை கொதிக்க வைக்கவும். பின்னர் அதை வடிகட்டி, வெதுவெதுப்பானதாக மாறும்போது குடிக்கவும். கஷாயத்தின் நன்மைகள்:

கொத்தமல்லி: ஆயுர்வேதத்தின் படி, கொத்தமல்லி குளிர்ச்சியூட்டும் பண்புகளைக் கொண்டுள்ளது மற்றும் வாயு, அமிலத்தன்மை மற்றும் மலச்சிக்கல் போன்ற பிரச்சினைகளுக்கு நல்லது.

சீரகம்: செரிமானத்தை மேம்படுத்த உதவுகிறது.

மிளகு: இது அஜீரணப் பிரச்சினைகளுக்கு ஒரு நல்ல மருந்தாக செயல்படுகிறது. இது வீக்கத்தைக் குறைக்கிறது, வாயு மற்றும் அமிலத்தன்மையை நீக்குகிறது. இது ஹைட்ரோகுளோரிக் அமிலத்தின் உற்பத்திக்கு உதவுகிறது மற்றும் உணவு நீண்ட நேரம் வயிற்றில் தங்குவதைத் தடுக்கிறது.

கிராம்பு: இவை வெறும் மசாலாப் பொருட்கள் மட்டுமல்ல, கால்சியம், பாஸ்பரஸ், சோடியம் மற்றும் வைட்டமின் ஏ போன்ற ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளன. அவை வாயு மற்றும் வீக்கத்தைத் தடுக்கின்றன. அவை இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துகின்றன.

மஞ்சள்: இதன் மருத்துவ குணங்கள் செரிமானத்திற்கு உதவுகின்றன.

தினமும் இதை குடிப்பது பல பிரச்சனைகளில் இருந்து உங்களை விடுவிக்கும்:

செரிமானப் பிரச்சினைகள்: வாயு, அமிலத்தன்மை, மலச்சிக்கல், வீக்கம் போன்ற பிரச்சினைகளிலிருந்து உடனடி நிவாரணம்.

# இனி இந்த 6 உதவித்தொகை பெற ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் - தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மார்ச். 03–

திருமண உதவித்தொகை உள்ளிட்ட 6 உவித்தொகை பெற இனி ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. குறிப்பாக, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் வழங்கப்படும் உதவித்தொகைகளை இனி எளிமையாக பெறலாம். இதற்கான அறிவிப்பு இப்போது வெளியிடப்பட்டுள்ளது. அதில், இறப்பு நிவாரணம், அதாவது, விபத்து மரணம் மற்றும் மீன்பிடிக்கும்போது விபத்தின் காரணம் அல்லாமல் மரணம், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை, விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்கான நிவாரணம், மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவருக்கான நிவாரணம், உறுப்பினரின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை பெற இனி ஆன்லைனில் விண்ணப்பக்கலாம்.



1. இறப்பு நிவாரணம் (விபத்து மரணம் மற்றும் மீன்பிடிக்கும்போது விபத்தின் காரணம் அல்லாமல் மரணம், இயற்கை மரணம்) மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை: நிவாரணம் சரியான நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கும், சட்ட சிக்கல்களைக் குறைப்பதற்கும், உறுப்பினர் ஒரு வாரிசுதாரரை முன்னுரிமை அடிப்படையில் முன்கூட்டியே நியமிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் உறுப்பினர் இறப்பு நிவாரணம் பெற வாரிசுதாரரை நியமிக்க முடியும். இறப்புச் சான்று மற்றும் வாரிசுச் சான்று சமர்ப்பித்தல் மட்டுமே போதுமான ஆவணங்கள் ஆகும். தேவைப்பட்டால், ஆவண சரிபார்ப்பு மற்றும் இறப்புக்கான காரணத்தை உறுதிபடுத்துவதற்கு மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அளவில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். துயர காலங்களில் குடும்பங்கள் வெவ்வேறு நடைமுறைகள் மற்றும் காலக்கெடுவுடன் இரண்டு தனித்தனி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியத்தைத் தவிர்ப்பதற்காக, இறப்பு நிவாரணத்துடன் ஈமச்சடங்கு உதவித்தொகை ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

2. விபத்தினால் ஏற்படும் உடல் உறுப்பு இழப்பிற்கான நிவாரணம் :இத்திட்டத்தின் கீழ் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுவது குறைக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர் எளிமையாக விண்ணப்பிக்க இழப்பு சதவீதம் குறிப்பிடப்பட்டுள்ள உடல் உறுப்பு இழப்பிற்கான சான்று மட்டுமே கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

3. மீன்பிடிக்கையில் காணாமல் போன மீனவருக்கான நிவாரணம்: இந்த நிவாரணம், முன்னுரிமை அடிப்படையில் வாரிசுதாரர் நியமிக்கப்படுவதை ஏற்றுக்கொள்வதன் மூலம் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. குறைக்கப்பட்ட ஆவணங்களான காவல்துறை முதல் தகவல் அறிக்கை, குடும்ப உறுப்பினர் சான்று மற்றும் வருவாய் துறையிடமிருந்து அதே காரணத்திற்காக பிற திட்டங்களிலிருந்து எந்த உதவித் தொகையும் பெறப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் சான்று மட்டுமே போதுமானதாக இருக்கும். இந்த விண்ணப்பங்கள் மாவட்ட மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநரால் பரிசீலிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க உறுதி செய்யப்படும்.

4. உறுப்பினரின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை: 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி: இத்திட்டம் கல்வி மேலாண்மை தகவல் அமைப்புடன் இணைக்கப்பட்டு எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், கல்வி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் மதிப்பெண் சான்று சமர்ப்பிக்க வேண்டிய தேவை நீக்கப்படுகிறது.

அனைத்து தொடர் பட்டப்படிப்பு, தொழில்கல்வி, பட்டயப்படிப்பு, மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி : இத்திட்டங்கள் பல்கலைக்கழக மேலாண்மை தகவல் அமைப்புடன் இணைக்கப்பட்டு எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. முந்தைய கல்வியாண்டிலிருந்து தானாக நிரப்பப்பட்ட விவரங்களுடன் உள்நுழைவு செய்வதன் மூலம் மறு ஆண்டுக்கு விண்ணப்பம் செய்ய எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

5. திருமண உதவித்தொகை: திருமணப் பதிவுச் சான்று மற்றும் ஆதார் அடையாள சரிபார்ப்பு மட்டுமே போதுமானதாக இருப்பதால், ஆவணத் தேவைகளைக் குறைப்பதன் மூலம் இந்தத்திட்டம் எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

6. மகப்பேறு உதவித்தொகை: இந்த திட்டம் கர்ப்பம் மற்றும் குழந்தை கூட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு தரவுகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலம், மருத்துவரை சந்தித்து சான்று பெற வேண்டிய தேவையை குறைக்கிறது. இதுதொடர்பாக, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது, மேலும் மேம்படுத்தப்பட்ட இணையதள விண்ணப்பம் உருவாக்கப்பட்டு விரைவில் வெளியிடப்படும் என அரசு தெரிவித்துள்ளது. எனவே, இந்த உதவித்தொகை பெற இருப்பவர்கள் இந்த புதிய அப்டேட்டை தெரிந்து கொண்டு விண்ணப்பிக்கவும்.

# வேலை வாய்ப்பு

## உச்ச நீதிமன்றத்தில் 22 காலியிடங்கள்: படிப்பு– பல்வேறு




நிறுவனத்தின் பெயர்: இந்திய உச்ச நீதிமன்றம், புது தில்லி

அறிவிப்பு எண்: F.6/RC–2025

வேலை வகை: மத்திய அரசு வேலைகள்

வேலைவாய்ப்பு வகை: வழக்கமான அடிப்படை

மொத்த காலியிடங்களின் எண்ணிக்கை: 22 உதவி ஆசிரியர், உதவி இயக்குநர் (முன்னாள் பணியாளர்), மூத்த நீதிமன்ற உதவியாளர் (முன்னாள் பணியாளர்), உதவி நூலகர் பதவிகள்

பணியிட இடம்: புது தில்லி

தொடக்க தேதி: 23.02.2026

கடைசி தேதி: 08.03.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.sci.gov.in/recruitments/

# PF கணக்கு வைத்திருப்பவர்களுக்கு குட்நியூஸ்..! வட்டி விகிதங்கள் அறிவிப்பு!?




புதுடெல்லி, மார்ச். 03–

நாடு முழுவதும் 75 மில்லியனுக்கும் அதிகமான ஊழியர்களுக்கு ஒரு முக்கியமான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 2025–26 நிதியாண்டிற்கான PF வைப்புத்தொகைக்கான வட்டி விகிதத்தை 8.25 சதவீதமாக மாற்றாமல் வைத்திருக்க ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு முடிவு செய்துள்ளது. இந்த முடிவை அமைப்பின் மிக உயர்ந்த கொள்கை அமைப்பான மத்திய அறங்காவலர் குழு அங்கீகரித்தது.

கடந்த ஆண்டை விட ஊழியர்களின் வருமானத்தில் எந்தக் குறைப்பும் இருக்காது என்பதை இது தெளிவுபடுத்துகிறது. 2024–25 ஆம் ஆண்டிலும் அதே 8.25 சதவீத விகிதம் பொருந்தினாலும், 2023–24 ஆம் ஆண்டில் இது 8.15 சதவீதத்திலிருந்து 8.25 சதவீதமாக அதிகரித்துள்ளது. நிபுணர்களின் கூற்றுப்படி, EPFO அதன் உறுப்பினர்களுக்கு நிலையான மற்றும் பாதுகாப்பான வருமானத்தை வழங்கும் நோக்கில் இந்த முடிவை எடுத்துள்ளது.


இருப்பினும், இந்த திட்டம் இன்னும் இறுதி கட்டத்தில் உள்ளது. இப்போது அது நிதி அமைச்சகத்தின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். ஒப்புதலுக்குப் பிறகு, நாடு முழுவதும் உள்ள PF கணக்கு வைத்திருப்பவர்களின் கணக்குகளில் புதிய வட்டி நடைமுறைக்கு வரும். PF வட்டி விகிதங்கள் கடந்த பத்தாண்டுகளாக ஏற்ற இறக்கமாக உள்ளன. 2021–22 ஆம் ஆண்டில், இது 8.10 சதவீதமாகக் குறைந்து, நான்கு தசாப்தங்களில் இல்லாத அளவுக்குக் குறைந்தது. மறுபுறம், 2015–16 ஆம் ஆண்டில், ஊழியர்கள் 8.80 சதவீதம் வரை அதிக வருமானத்தைப் பெற்றனர். 2019–20 மற்றும் 2020–21 ஆம் ஆண்டுகளில், விகிதம் 8.50 சதவீதமாக இருந்தது.

முதலீட்டு செயல்திறன் வட்டி விகித முடிவின் பின்னணியில் உள்ள முக்கிய காரணியாகும். EPFO உறுப்பினர்களின் நிதியை அரசாங்கப் பத்திரங்கள், பத்திரங்கள் மற்றும் பங்குகள் போன்ற பல்வேறு சொத்துக்களில் முதலீடு செய்கிறது. அந்த முதலீடுகளிலிருந்து வரும் மொத்த வருமானத்தை மதிப்பிட்ட பின்னரே புதிய விகிதம் முடிவு செய்யப்படுகிறது. விகித உயர்வு இல்லாவிட்டாலும், தற்போதைய 8.25 சதவீத மகசூல் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

# பெற்றோர்களே..!! குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டாம்..!! சுகாதாரத்துறை!

சென்னை, மார்ச். 03–

தமிழ்நாட்டில் கோடை காலம் தொடங்கும் முன்னரே வெப்பத்தின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், ஆங்காங்கே ‘சின்னம்மை’ (Chickenpox) பாதிப்புகள் தலைதூக்க தொடங்கியுள்ளன. பரவி வரும் இந்த வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த, தமிழக பொது சுகாதாரத்துறை அதிரடியான முன்னெச்சரிக்கை வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. குறிப்பாக, பள்ளி செல்லும் குழந்தைகளிடையே இந்தத் தொற்று எளிதில் பரவக்கூடும் என்பதால், பெற்றோர்களுக்குக் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட குழந்தைகளை பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ள சுகாதாரத்துறை, நோயின் தீவிரம் குறையும் வரை அவர்களை வீட்டிலேயே வைத்துப் பராமரிக்க வேண்டும் என தெரிவித்துள்ளது. குழந்தைகளின் உடலில் தோன்றும் அம்மை கொப்புளங்கள் முழுமையாக காய்ந்து, அவை தானாக உதிரும் வரை மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தி வைப்பது அவசியம். இதன் மூலம் பள்ளிகளிலும், பொது இடங்களிலும் மற்ற குழந்தைகளுக்கு தொற்று பரவுவதை முன்கூட்டியே தடுக்க முடியும் என அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த வைரஸ் காற்று மூலமாகவும், நேரடி தொடர்பு மூலமாகவும் வேகமாக பரவக்கூடியது என்பதால், இருமல் அல்லது தும்மலின் போது வாய் மற்றும் மூக்கை கைக்குட்டை கொண்டு முறையாக மூடிக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. நோய் பாதிப்புக்குள்ளானவர்கள் குணமடையும் வரை பொது இடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும் என்றும், கைகளை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் சுகாதாரத் துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.






மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், கள்ளந்திரி ஊராட்சி மன்றத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பாக தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனை தொடர்பாக சிறு புகைப்பட கண்காட்சி நடைபெற்றது கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டு களித்து மகிழ்ந்தனர்

“துணிப்பையை கையில் எடுப்போம்” “பிளாஸ்டிக் பையை கைவிடுவோம்”

## தமிழ்நாடு அரசு
## சோழவந்தான் பேரூராட்சி,
### மதுரை மாவட்டம்

**ந.க.எண்.402/2025/** **நாள்:25.02.2026**

**கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026 (சேமிப்பு நிதி)**
**குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அழைப்பு**

1. சோழவந்தான் பேரூராட்சியில் 2025–2026 ஆம் ஆண்டு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (சேமிப்பு நிதி) திட்டத்தின் கீழ் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணியினை செய்வதற்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் பெற விரும்பும் ஒப்பந்ததாரர்கள் பொதுப்பணித்துறையில் அல்லது நெடுஞ்சாலைதுறையில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களாக இருக்க வேண்டும் அல்லது குறிப்பிட்ட பணிகளில் அனுபவம் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அதற்கான சான்றிதழ்களை உரிய துறை அதிகாரிகளிடமிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
2. இப்பேரூராட்சியில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மூலம் இணையதளத்தின் வழியாக ஒப்பந்தப்புள்ளிகள் (Online tender) இப்பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது செயல் அலுவலரின் அங்கீகாரம் பெற்ற அலுவலராலோ வரவேற்கப்படுகின்றன.
3. பணிகளுக்குரிய ஒப்பந்தப்படிவங்களை 25.02.2026ம் தேதி முதல் 05.03.2026ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை E–Token / Digital Signature card யை உபயோகித்து https://tntenders.gov.in என்ற இணையதளத்திலிருந்து தகவல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. டேவணி தொகையினை பேரூராட்சியின் இந்தியன் ஒவர் சிஸ் வங்கி கணக்கு எண். 28860100005651, IFS Code IOBA0002886 RTGS முறையில் செலுத்த வேண்டும்.
5. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் 05.03.2026ம் தேதி வியாழக் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு திறக்கப்படும்.
6. இதர விபரங்களை அலுவலக வேலை நேரத்தில், நேரில் தெரிந்து கொள்ளலாம்.


| வ. எண். | பணிகள் விபரம் | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) | காப்புத் தொகை (1%) ரூ. | ஒப்பந்த புள்ளி படிவ கட்டணம் + மதிப்பு கூட்டுவரி ரூ. | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 4 மீனாட்சி நகர் குறுக்குத் தெரு 1, கருவேலந் தோப்பு குறுக்கு தெரு, ஆலங் கொட்டாரம் மேற்கு மெயின் ரோடு, ஆலங்கொட்டாரம் மேற்கு குறுக்கு தெரு, மற்றும் ஆலங் கொட்டாரம் கிழக்கு 3வது குறுக்குத் தெரு பகுதியில் தார்ச்சாலை அமைத்தல் | 48.00 | 48000 | 16890 | 90 நாட்கள் |

**தலைவர்,**
சோழவந்தான் பேரூராட்சி,
மதுரை மாவட்டம்.

**செயல் அலுவலர்,**
சோழவந்தான் பேரூராட்சி,
மதுரை மாவட்டம்.

வெ.ஆ.எண்: 74/2026/ செ.ம.தொ.அ/ மதுரை/ நாள்: 02.03.26.

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம்” “சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்”



## சினிமா துளிகள்..!

### ரஜினி சார் Magician – ஜெயிலர் 2 அப்டேட் கொடுத்த சுராஜ்!



இயக்குநர் நெல்சன் மற்றும் ரஜினிகாந்த் கூட்டணியில் உருவாகி வரும் திரைப்படம் “ஜெயிலர் 2.” இந்திய திரையுலகின் பல உச்ச நட்சத்திரங்கள் இந்தப் படத்தில் நடித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் உருவாகி வரும் ஜெயிலர் 2 திரைப்படம் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், ஜெயிலர் படம் குறித்த புதிய அப்டேட்டை நடிகர் சுராஜ் கொடுத்துள்ளார்.

கென் கருணாஸ் இயக்கி நடித்துள்ள “யூத்” திரைப்படத்தில் சுராஜ் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்திற்கான நேர்காணல் ஒன்றில் பேசிய சுராஜ், “ஜெயிலர் 2 திரைப்படம் அருமையாக வந்திருக்கிறது. இந்தப் படம் ஜெயிலர் படத்தை விட சிறப்பாக இருக்கும்.

எனக்கு நீண்ட காலமாக ரஜினி சாரை பார்க்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால், இந்தப் படத்தில் அவருடன் பணியாற்றவே வாய்ப்பு கிடைத்து. ஜெயிலர் 2 படப்பிடிப்பில் ஒவ்வொரு ஷாட்டிலும் ரஜினி சார் ஆச்சர்யப்படுத்திக் கொண்டே இருந்தார். அவர் ஒரு வித்தைக்காரர்,” என்றார். தொடர்ந்து பேசிய அவர், “தனுஷ் சார் ஸ்டார் நடிகர். அவர் ஒருபக்கம் கமர்ஷியல் திரைப்படங்களும், மறுபக்கம் மரியான் மற்றும் அசுரன் போன்ற திரைப்படங்களிலும் நடிக்கிறார். அவர் தற்போது ஹாலிவுட் வரை சென்றுள்ளார்,” என்றார்.



சென்னை திமுக தலைமை கழகத்தில் பழனி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட விருப்பமனுவை மாவட்ட கழக செயலாளர் ஐபி செந்தில்குமார் எம்.எல்.ஏ. வழங்கினார்.



இஸ்மாயில் லக்கி
டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# தொகுதி பங்கீட்டில் இழுபறி: செல்வப்பெருந்தகையுடன் ராகுல்காந்தி ஆலோசனை!



சென்னை, மார்ச். 03–
கூட்டணி ஆட்சி தமிழ்நாட்டுக்கு சரிபட்டு வராது என்று முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டமாக தெரிவித்தார். இதையடுத்து ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற நிலைப்பாட்டில் இருந்து கிரிஷ் சோடங்கர் பின்வாங்கினாலும், காங்கிரஸ் கட்சிக்கு குறைந்தபட்சம் 35 தொகுதிகள் ஒதுக்க வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்து வருகிறார்.

தி.மு.க.வுடன் நடைபெற்ற தொகுதி பங்கீட்டில் இதை அவர் வலியுறுத்தினார். ஆனால் காங்கிரஸ் கட்சிக்கு 25 தொகுதிகள் மட்டும் ஒதுக்க முடியும் என்று தி.மு.க. தரப்பில் திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இதனால் அதிருப்தியடைந்த கிரிஷ் சோடங்கர் டெல்லியில் நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், 'தி.மு.க. கூட்டணியில் 25 இடங்களை ஏற்றுக் கொள்ள மாட்டோம்' என்று திட்டவட்டமாக தெரிவித்தார். மேலும் காங்கிரசின் பலத்தை த.வெ.க. அங்கீகரிக்கிறது என்ற அதிரடி கருத்தையும் கூறினார்.

இதேபோல், திமுகவில் உள்ள 4 இடங்களில், திருச்சி சிவாவுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது. மீதமுள்ள 3 இடங்களை காங்கிரஸ், தேமுதிக, மதிமுக ஆகியவை கேட்டு வருகின்றன. திமுகவிலும் பலர் கேட்பதால் திமுகவிலும் இழுபறி நிலை நீடிக்கிறது.

இந்த நிலையில், திமுக உடனான தொகுதி பங்கீட்டில் இழுபறி நீடிக்கும் சூழலில் ராகுல் காந்தி, காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே.சி. வேணுகோபால், தமிழ்நாடு மாநில பொறுப்பாளர்கள், மாநில தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் காணொலி மூலம் ஆலோசனை நடத்தி வருகின்றனர். இந்த ஆலோசனையில் மல்லிகார்ஜுன கார்கே, சோனியா காந்தி பங்கேற்றுள்ளனர். மாநிலங்களவை இடம் தொடர்பாக காங்கிரஸ் இன்றைக்குள் முடிவை அறிவிக்க திமுக கெடு விதித்ததாக கூறப்படும் நிலையில் இந்த ஆலோசனை நடந்து வருகிறது. மாநிலங்களை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலுக்கு 2 நாட்கள் இருப்பதால் தொகுதி பங்கீட்டை விரைந்து முடிக்க திமுக திட்டமிட்டுள்ளது.

# மாநிலங்களவை தேர்தலில் யாருக்கு சீட்டு?: கூட்டணி கட்சிகளும் கேட்பதால் தி.மு.க., அ.தி.மு.க.வில் இழுபறி!



சென்னை, மார்ச். 03–
தமிழகத்தில் மாநிலங்களவை எம்.பி.யாக அதிமுக தரப்பில் உள்ள தம்பிதுரை, ஜி.கே. வாசன் ஆகியோரின் பதவிக்காலமும், திமுக தரப்பில் உள்ள என்.ஆர். இளங்கோ, கனிமொழி என்.வி.என்.சோமு, திருச்சி சிவா, பி. செல்வராசு ஆகியோரின் பதவிக்காலமும் வருகிற ஏப்ரல் 2–ந் தேதியுடன் முடிவடைகிறது.

எனவே, இந்த 6 எம்.பி. காலி பதவி இடங்களை நிரப்புவதற்காக இம்மாதம் (மார்ச்) 16–ந் தேதி தேர்தல் நடைபெறும் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு வெளியிட்டு உள்ளது.

அதன்படி, வேட்பு மனு தாக்கல் கடந்த மாதம் (பிப்ரவரி) 26–ந் தேதி தொடங்கியது. வேட்புமனு தாக்கல் முடிய இன்னும் 2 நாட்களே (மார்ச் 5–ந் தேதி) உள்ள நிலையில், இன்னும் திமுக, அதிமுக ஆகிய 2 கட்சிகளும் வேட்பாளர்களை தேர்வு செய்யாமலேயே இருந்து வருகின்றன.

மாநிலங்களவை தேர்தலில் போட்டியிட வேட்பாளர்கள் தாக்கல் செய்யும் மனுக்கள் மீதான பரிசீலனை மார்ச் 6–ந் தேதி நடைபெறுகிறது. மார்ச் 9–ந் தேதி வரை மனுவை திரும்ப பெறுவதற்கான கடைசி நாளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலங்களவை தேர்தலில் போட்டி இருந்தால் மார்ச் மாதம் 16–ந் தேதி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும். தொடர்ந்து மாலை 5 மணிக்கு வாக்கு எண்ணிக்கை நடைபெறும். மார்ச் 20–ந் தேதி தேர்தல் நடவடிக்கைகள் முடிவுறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சென்னை தலைமை செயலகத்தில் இன்று சுயேட்சை வேட்பாளர் பத்மராஜன் மாநிலங்களவை தேர்தலில் போட்டியிட தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

அனைத்து தேர்தல்களிலும் தவறாமல் வேட்புமனு தாக்கல் செய்யும் அவர், தற்போது 252–வது முறையாக வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளார். கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக இது போன்ற முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள எம்.எல்.ஏ.க்கள் எண்ணிக்கை அடிப்படையில் திமுக சார்பில் 4 எம்.பி.க்களையும், அதிமுக சார்பில் 2 எம்.பிக்களையும் போட்டியின்றி தேர்வு செய்ய முடியும். ஆனால், சட்டசபை தேர்தலுக்கு தயாராகி வரும் திமுக, அதிமுக ஆகிய 2 கட்சிகளும், கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை நடத்தி வரும் நிலையில், மாநிலங்களவை வேட்பாளர் தேர்வு குறித்து இன்னும் முடிவு செய்யாமலேயே இருந்து வருகின்றன.

அதற்கு கூட்டணி கட்சிகளும் மாநிலங்களவை சீட் கேட்டுவருவதே காரணம் என்று கூறப்படுகிறது. அதிமுகவில் உள்ள 2 இடங்களில், ஒன்று தம்பிதுரைக்கு மீண்டும் வழங்கப்படும் என்று தெரிகிறது. மற்றொன்றை ஜி.கே.வாசன் மீண்டும் கேட்டு வருவதாக கூறப்படுகிறது. அதேபோல், பாமகவை சேர்ந்த அன்புமணியும் கேட்பதால் இழுபறி நிலை நீடிக்கிறது.

இதேபோல், திமுகவில் உள்ள 4 இடங்களில், திருச்சி சிவாவுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது. மீதமுள்ள 3 இடங்களை காங்கிரஸ், தேமுதிக, மதிமுக ஆகியவை கேட்டு வருகின்றன. திமுகவிலும் பலர் கேட்பதால் திமுகவிலும் இழுபறி நிலை நீடிக்கிறது.

வேட்புமனு தாக்கல் முடிய இன்னும் 2 நாட்களே இருப்பதால், இன்று இரவு, அல்லது நாளை காலை திமுக, அதிமுக ஆகிய 2 கட்சிகளிலுமே வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, உடனடியாக வேட்புமனு தாக்கல் செய்வார்கள் என்று கூறப்படுகிறது. அனேகமாக, காலியாக உள்ள 6 இடங்களுக்கு 6 பேர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், மாநிலங்களவை தேர்தலில் போட்டி இருக்காது என்றே கூறப்படுகிறது.

# போர் பதற்றத்தால் இந்தியாவில் பெட்ரோல் - டீசல் விலை உயருமா?




சென்னை, மார்ச். 03–
மத்திய கிழக்கில் ஈரான், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இடையே கடுமையான மோதல் நடந்து வருகிறது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளன.

ஈரானும் பதிலடியாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பல நாடுகளிலும் உள்ள அமெரிக்க ராணுவத் தளங்களை குறிவைத்து தாக்கி வருகிறது.

சர்வதேச கச்சா எண்ணெய் போக்குவரத்தில் முக்கிய கடல் வழியான ஹோர்முஸ் நீரிணையை மூடிவிட்டதாக கூறியுள்ள ஈரான், அமெரிக்கா, பிரிட்டனுக்குச் சொந்தமான 3 எண்ணெய் கப்பல்களை தாக்கியதாகவும் தெரிவித்துள்ளது.

உலகின் ஒட்டுமொத்த எண்ணெய் தேவையில் ஐந்தில் ஒரு பங்கு, அதாவது 20% இந்தப் பாதை வழியாகவே செல்கிறது. தினமும் சுமார் 2 கோடி பேரல் கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருள் இதன் வழியாகக் கொண்டு செல்லப்படுகிறது.

சவுதி அரேபியா, ஈரான், ஈராக், குவைத் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் தங்கள் ஏற்றுமதிக்கு இந்தப் பாதையையே நம்பியுள்ளன இதனால் கச்சா எண்ணெய் ஒரு பீப்பாய் 80 டாலராக அதிகரித்துள்ளது.

இந்நிலையில், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்தாலும் பெட்ரோல், டீசல் விலை இந்தியாவில் உயராது என மத்திய அரசு தரப்பில் தகவல் வெளியாகியுள்ளது.

நாடு முழுவதும் பெட்ரோலிய பொருட்கள் தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எதிர்பார்ப்பை விட அதிகமான விலை ஏற்றம் இருந்தால் மட்டுமே பெட்ரோல் மற்றும் டீசல் விலையேற்றம் குறித்து மத்திய அரசு பரிசிலனை செய்யும் என்று கூறப்படுகிறது.

# சங்கீதாவுக்கு எதிராக பதிவுகள்... தொண்டர்களை விஜய் கண்டிக்க வேண்டும் - மாதர் சங்கம்!



சென்னை, மார்ச் 03–
விவாகரத்துகோரி விஜய்யின் மனைவி சங்கீதா செங்கல்பட்டு முதன்மை அமர்வு கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளார். இதன் காரணமாக தவெக தொண்டர்கள் சமூக வலைத்தளங்களில் சங்கீதாவுக்கு எதிராக பதிவிட்டு வருகின்றனர். இதை கண்டிக்காமல் விஜய் மவுனம் காப்பது மிக பெரிய குற்றம் என்று இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தமிழ்நாடு பொதுச்செயலாளர் மு.கண்ணகி தெரிவித்துள்ளார்.

# பதவியேற்பு விழா!



மதுரை, மார்ச். 03–
தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்ற *முதன்மை பொது சங்கமாம் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் பிரதான இணைப்புச் சங்கமான தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்கத்தின் மாநில தலைவராக சென்னை எழும்பூர் எல்ஸ் ரோடு எண்: 32, ஹோட்டல் கிங்ஸ் தாமரை ஹாலில் மாநில தேர்தல் அலுவலர் திரு.கே. சூரிய நாராயணன் அவர்கள் பதவிப்பிரமாண ம் செய்து வைக்க ப.ஜெ. ரவிக்குமார் மாநில தலைவராக பதவியேற்றார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு மருத்துவ துறை அமைச்சுப் பணி அலுவலர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் எஸ். முத்து ரமேஷ் அவர்கள் *முன்னிலை* நடத்தினார். இவ்விழாவை தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப்பணி அலுவலர் சாங்கம் *மாநில தலைவர், ப.ஜெ.ரவிக்குமார் அவர்கள் *தலைமை ஏற்று நடத்தினார்* . இதில் மாநில/மாவட்ட நிர்வாகிகள் டி.பார்த்த சாரதி* மாநில பொருளாளர், ஆர்.கண்ணன் மாநில தலைமை நிலை செயலாளர், ஜி.பாலமுருகன் மாநில அமைப்பு செயலாளர், ஏ.வி.ஜி.சேகர் மாநில துணை பொது செயலாளர், மதுரை அ.இளங்கோ மாநிலத் துணைச் செயலாளர், ஆர்.ஹரிகிருஷ்ணன். மாநில இணை செயலாளர், எம். கோதண்டராமன் மாநில இணை செயலாளர் , பி.கார்த்திகேயன் சென்னை மாவட்ட தலைவர் கிளை –1, ஜெ.ராஜன் சென்னை மாவட்ட தலைவர் கிளை –2, ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு அரசின் அங்கீகாரம் பெற்று பாரம்பரமிக்க முதன்மை பொது சங்கம் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத் தலைவர் *வெ.மகேந்திரகுமார் அவர்கள் *விழா பேருரை* ஆற்றினார். இந்நிகழ்வில் என்.தண்டபாணி* மேனாள் மாநில தலைவர், ப. தேசிங்குராஜன் மேனாள் மாநில தலைவர், ஆர்.சந்திரசேகர் மேனாள் மாநிலத்துணைத் தலைவர்,ஆ.குமார் மேனாள் மாநிலத்துணைத் தலைவர், ஆகியோர் விழா சிறப்புரையாற்றினார்கள்.*இந்நிகழ்வில் மேலும் *சிறப்பு அழைப்பாளராக மருத்துவக் கல்வி இயக்குனர் மதிப்புமிகு மருத்துவர் டாக்டர். எட்வின் ஜோ* ( ஓய்வு ) சிறப்புரை ஆற்றி சிறப்பித்தார். மேலும் இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு அலுவலகம் ஒன்றியத்தின் பெ.திலகர் மாநில பொருளார், ந.பாலசுப்பிரமணியன். மாநில துணைத் தலைவர் ,ப.ராஜா மாநில துணைத் தலைவர், பி.கவிதா மாநில மகளிரணி செயலாளர், கோதண்டராமன், அரசு அலுவலர் ஒன்றியத்தின் கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் கார்த்திகேயன், கோவை மாவட்ட தலைவர் சின்னையா சாமி, தர்மபுரி மாவட்ட தலைவர் குமார், நெல்லை பிரகாஷ், பிச்சையா, சென்னை விக்னேஸ்வரி, தெய்வானை, தங்கத்துரை மாநிலத் தலைவர் தமிழ்நாடு செவிலியர் சங்கம், முனைவர். மு.வெங்கடாசலம் சங்க நிறுவனத் தலைவர் –TNGMD AESW & NAA, பா.லோகு மாநிலத் தலைவர் – தமிழ்நாடு அரசு மருத்துவத்துறை அனைத்து ஊழியர் சுகாதார மற்றும் செவிலியர் உதவியாளர் சங்கம்,டி. குணசேகரன்ஒ,மாநில தலைமை நிலையசெயலாளர் – TNGMD AESW & NAA ஆகியோர் வாழ்த்துரை தெரிவித்தனர்.

இவ்விழாவில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியம் மாநில / மாவட்ட நிர்வாகிகள் மற்றும் இணைப்பு சங்க மாநில தலைவர்கள் மற்றும் தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சுப் பணி அலுவலர் சங்கத்தின் மாநில மாவட்ட நிர்வாகிகள் என அனைவரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். இந்நிகழ்வில் நிறை உறை டி.பார்த்தசாரதி மாநில பொருளாளர்,பி.கவிதா மாநில மகளிர் அணி செயலாளர், எம். அன்னராஜ் சென்னை மாவட்ட செயலாளர் நன்றியுரை ஆற்றினார். விழா சிறப்புடன் நடைபெற்றது.

# 40 ஆண்டு கால பாரம்பரியம்... ரமலான் நோன்பு இருப்பவர்களுக்கு உணவு வழங்கும் இந்துக்கள்!



சென்னை, மார்ச். 03–
சென்னையில் வாலாஜா பெரிய மசூதி 200 ஆண்டு காலம் பழமை வாய்ந்தது. இந்த மசூதியில், புனித ரமலான் மாதத்தில் நோன்பு இருக்கும் முஸ்லிம்களுக்கு இந்து தொழிலதிபர்கள் உணவு வழங்கும் பாரம்பரியம் 40 ஆண்டுகளாக தொடர்கிறது. இன்றைய பாகிஸ்தானில் இருந்து வந்த சிந்தி இன மக்கள் இந்து மத நம்பிக்கை கொண்டவர்கள். சென்னையில் பல்வேறு பகுதிகளில் தொழிலதிபர்களாக உள்ள இவர்கள் ரமலான் மாதத்தில் தினமும் தவறாமல், மசூதிக்கு 40 முதல் 50 வாளிகளை கொண்டு வருகின்றனர். மாலை நேரத்தில் நோன்பு முடிக்கும் ஆயிரம் முதல் 1,100 பேருக்கு 7 வகையான சைவ உணவுகளை வழங்குகின்றனர். அவற்றில் வெஜிடபுள் பிரியாணி, கலவை சாதம், குங்குமப்பூ கலந்த பால், புதிய பழங்கள் மற்றும் பேரீச்சை ஆகியவை சுபிதார் கோவிலில் வைத்து காலை 7.30 மணி முதல் தயாரிக்கப்பட்டு மாலையில் இந்த மசூதிக்கு கொண்டு வரப்பட்டு வழங்கப்படு கின்றன. இதுபற்றி சுபிதார் அறக்கட்டளையின் மூத்த சேவையாளர் அசோக் கூப்சந்தனி கூறும்போது, மத நல்லிணக்கத்திற்கு மற்றொரு எடுத்துக்காட்டாகவும், மற்ற மதத்தினருக்கு மதிப்பளிக்கும் வகையிலும், உணவு வழங்கும்போது அனைத்து தொழிலதிபர்களும் தலையில் தொப்பி அணிந்து கொள்வா ர்கள். மசூதியை நிர்வகிக்கும் ஆற்காடு இளவரசர் நவாப் முகமது அப்துல் அலி, சுபிதார் அறக்கட்டளை தயாரிக்கும் எந்த உணவும் மசூதிக்குள் அனுமதிக்கப்படும் என கூறியுள்ளார். இதற்காக நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என அசோக் கூறினார். சுபிதார் கோவிலின் சுவர்களில் சுபி சாமியார்கள், இந்து கடவுள்கள், இயேசு கிறிஸ்து மற்றும் சீக்கிய குருக்கள் என பல்வேறு மதங்களை சார்ந்தவர்களின் புகைப்படங்கள் காணப்படுகின்றன.

# மத்திய கிழக்கில் பதற்றம்; தமிழர்களுக்கு பாதிப்பு இல்லை - தமிழக அரசு தகவல்!

சென்னை, மார்ச். 03–
மத்திய கிழக்கு நாடுகளில் தங்கி வேலை செய்து வரும் தமிழர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி, மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள போர் சூழல் காரணமாக அங்குள்ள தமிழர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என தமிழக அரசின் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தமிழக அரசு அமைத்துள்ள கட்டுப்பாட்டு அறைக்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த 974 பேர் உதவிகேட்டு தொடர்பு கொண்டுள்ளதாகவும், இவர்கள் அனைவரும் தொழில் மற்றும் சுற்றுலாவுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசியில் உதவி கேட்டவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டு, அவர்களுக்கு தங்குமிடம், உணவு வசதி ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ்நாடு அரசின் வெளிநாடு வாழ் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

எனவே, மத்திய கிழக்கில் உள்ளவர்களின் உறவினர்கள் யாரும் அச்சப்படத் தேவையில்லை எனவும், விமான சேவை தொடங்கப்பட்டவுடன் அனைவரும் பத்திரமாக அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் எனவும் கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ரெயில் தண்டவாளம் அருகே பட்டம் விட்டால் சிறை: ரெயில்வே எச்சரிக்கை!



சென்னை, மார்ச். 03–
ரெயில்வே தண்டவாளங்கள், மின்சாரப் பாதைகளுக்கு அருகில் பட்டம் விடுவதை தவிர்க்க வேண்டும் என்று சென்னை ரெயில்வே கோட்டம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதுகுறித்து சென்னை ரெயில்வே கோட்டம் தரப்பில் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டிருப்பதாவது;

"உயர் அழுத்த மின்சாரப் பாதைகளுக்கு அருகில் பட்டம் விடுவது என்பது விளையாட்டல்ல.. அது உயிருக்கே ஆபத்து விளைவிக்கும் செயல். 25000 வோல்ட் மின்சாரம் பாயும் கம்பி மீது பட்டம் விடும் நூல் சிக்கினால் பட்டம் விடுபவர் மீது மின்சாரம் பாயும். தண்டவாளம் அருகே பட்டம் விடுபவர்களுக்கு 6 மாதம் சிறை அல்லது ரூ.1000 அபராதம் விதிக்கப்படும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 15-ம்தேதி மெயின் தேர்வு: ரத்து செய்யப்பட்ட குரூப்-2 தேர்வுக்கான ஹால் டிக்கெட் வெளியீடு...!




சென்னை, மார்ச். 03–
முறையான திட்டமிடல் இல்லாமல் பல்வேறு குளறுபடிகளால் ரத்து செய்யப்பட்ட டிஎன்பிஎஸ்சி குரூப் 2 தேர்வு ர மீண்டும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், வரும் 15ந்தேதி மெயின் தேர்வு நடைபெற உள்ளது. இதையொட்டி, அதற்கான ஹால் டிக்கெட் வெளியிடப்பட்டு உள்ளதாக டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது. குரூப் 2 தேர்வுக்கான ஹால் டிக்கெட்டை டிஎன்பிஎஸ்சி இணையதளத்தில் வெளியிட்டுள்ளது. அதன்படி, வருகிற 15ம் தேதி மெயின் தேர்வு நடக்கிறது.



கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்களின் மார்ச் 1 பிறந்த தினத்தை முன்னிட்டு நாமக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, எருமப்பட்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ராசிபுரம் அரசு மருத்துவமனையில் மார்ச் 1 தேதி பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை மாநிலங்களவை உறுப்பினர் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளருமான கே.ஆரஎன் இராஜேஷ்குமார் அணிவித்தார்.

தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020